

அமரர்.

# திருமதி. வள்ளிநாயகி பூபாலசிங்கம்

அவர்களின்

## 31ம் நாள் நினைவு மலர்

09.03.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்புவழி காட்டி ஆதரவு தந்து

இன்பமுடன் வாழவைத்து இடையில்

பிரிந்து சென்றீர்கள்

துன்பநிலை மாறி வெந்த மனம் ஆற

இந்த மலர் உம் கமல பாதங்களில்

சமர்ப்பணம் தாயே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏழைக்கு எழுத்தறிவித்த அன்னையே போற்றி



அமரர்

# திருமதி.வள்ளிநாயகி பூபாலசிங்கம்

மண்
19.02.1937

விண்
07.02.2017

## திதி வெண்பா

‘சீர்பெறு துர்முகி வருடம் தை மாதம்
பூர்வ பக்கத் துவாதசியில் பூவுடலை – பார்விட்டு
பவமதனை முடிப்பதற்கும் பதப்பேறு பெறுவதற்கும்
ஏவ வள்ளிநாயகி தேர்ந்தெடுத்த நாள்’

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமம் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தனைக்
காதலான் கூப்புவார்தம் கை

## தேவாரம்

எத்தாயர் எத்தந்தை எச்சுற்றத்தார்
எம்மாடு சும்மாடாம் ஏவர் நல்லார்
செத்தால் வந்து உதவுவார் ஒருவரில்லை
சிறுவிறகால் தீமூட்டிச் செல்லா நிற்பர்
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக் காவுடைய செல்வா என்றன்
அத்தாவுன் பொற்பாதம் அடையப் பெற்றால்
அல்லல் கண்டங் கொண்டடியேன் என் செய்கேனே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே.

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணை மாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்ற எம் சிவனைத்
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னைக் கண்டு கண்டு உள்ளம்
குளிரஎன் கண் குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

பாலுக்கு பாலகன் வேண்டி
அழுதிடப் பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள்
செய்தவன் மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற தில்லைச்
சிற்றம்பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு வேண்டி பின் வேண்டுகின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்வேண்டில் நான்
மகிழ்ந்து பாடி அறவா நீ ஆடும்போது உன் அடியின் கீழ்இருக்க என்றார்.

# திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலம்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முத்தனாய் வாழ்வினைப் பெருவாழ்வின்
முத்தியே சேர்வதற்கு அருள்வாயே
உத்தமா ஞான சற்குண நேயா
ஒப்பிலா மாமணித் திரிவாசா
வித்தகா ஞான சந்தினி பாதா
வெற்றி வேலாயுதப் பெருமானே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏழைக்கு எழுத்தறிவித்த
# உத்தமியே போற்றி



ஈழவள நாட்டின் தென்கைலாய மென போற்றப்படும்
திருக்கோணமலையின் தமிழ் கிராமமான நிலாவெளியில்
சைவச் சீலராய் வாழ்ந்திருந்த செல்வநாயகம்
பொன்னம்மா மகளாக மடிதனை குளிர்விக்க மகளாக
வள்ளிநாயகி பிறந்தாரே சுடராய்!

அண்ணன் ஆறுமுகம் தம்பி கனகசபை (உதவிக்கல்விப்
பணிப்பாளர்) தங்கை தங்கநாச்சியார் சகோதரங்கள்
அன்பினில் மகிழ்ந்து பாசமோடு நேசமாய் கல்வியும்
கற்றிட ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியின்
நேர்த்தியான கற்பித்தலில் ஆற்றலும் அறிவும் பெற்றே
B.Com ஆசிரியராகி பயிற்றப்பட்ட ஆசிரியராக ஆசிரிய
பயிற்சி கல்லூரியில் இருந்து வெளிவந்தாரே
மனமும் பூரித்திட!

முதல் ஆசிரிய நியமனம் கும்புறுபிட்டி
மகாவித்தியாலயத்தில் பின்னர் குச்சவெளி பாடசாலை
திருமலை பெருந்தெரு விக்னேஸ்வரா தொடர்ந்து
நிலாவெளி தமிழ் மகா வித்தியாலத்தில் ஆசிரியராக
அதிபராக கடமையும் ஆற்றியே மாணவ செல்வங்களை
தம்பிள்ளைகளாய் அரவணைத்து கல்விச் சீலராக்க
அல்லும்பகலும் கடமையும் புரிந்து நிறைந்த வாழ்வினில்
மிதந்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுத்தமேகம் சூழ்ந்து மாணவரின் கல்வியும் சீரழிந்து போவதை கண்டு துடிதுடித்து வீடு வீடாய் சென்று பிள்ளைகளை அழைத்து தம் பணத்தை அள்ளிக் கொடுத்து ஏழை மாணவர்களின் கல்விச் சிறப்பிலும் தம்மை ஈடுபடுத்தி கல்வித் தாயாகி வள்ளிநாயகி ரீச்சரிடம் நாம் கற்றோமென நிலாவெளி மக்களே வாழ்த்திட வாழ்ந்தாரே!

தமிழ் மகாவித்தியாலய வளர்ச்சியில் பெரும் பங்குகொண்டு: மனம் நிறைவாக ஆயிரத்து தொளாயிரத்து அறுபத்தொன்று பங்குனி பண்னிரண்டில் வட புலம் யாழில் உரும்பிராய் தமிழ் மணம் கொண்ட கிராமத்தில் சைவத் தமிழ் சீலர்களாக வாழ்ந்திருந்த வேலுப்பிள்ளை தையல்முத்து மகனான நல் ஆசான் அதிபரான பூபாலசிங்கத்தை கரமும் பற்றினாரே!

இராஜேஸ்வரி வள்ளிநாயகம் கைலாசபதி ஆகியோரின் அன்புபாச மைத்துனியாகவும் சிவஞானசுந்தரம் சிவானந்தத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக விரிவுரையாளர் சரவணபவன் சிவகணேஸ்வரன் தேவரஞ்சிதமுடன் பத்மலோஜினி, சிவாஜினி, தேவகி வாசுகி, வனஜா, சேந்தன், சபேசன், திருமலை செலான்வங்கி தர்ஷினி வைத்தியர் திவாகரன் பிரதீபன் ஆகியோரின் மாமியாய் அகமலர்ந்தாரே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களுக்கு மேலாய் சகோதரி மக்களை தம் மக்களாய்
ஏற்று கணவர் துணையோடு பாஸ்கரன் கோணேஸ்வரன்
விக்னேஸ்வரன் அன்பினில் பொறுமை நேர்மை கல்வி
வாழ்வு வளங்களையெல்லாம் ஊட்டி வளர்த்து நற்பண்பு
சமயநெறியெல்லாம் கற்றுத் தந்து நற்மக்களாய்
அயலவர் போற்ற நிமிர்ந்து வாழ்ந்தாரே சிறந்து!

மக்களுக்கு உற்ற துணைகளாக கோமதி ஆனந்தி
தயாளினி மருமக்களாய் மகிழ்விக்க
பேரக்குழந்தைகளாய் மீரா, மயூரி, தேவகி, பகீரதன்,
விபிலன் அனனியா பாரதி மகிழ்வினில் தம்மை மறந்து
ஆனந்தக் குளியலில் மானுட சுகமும்
கண்டாரே நன்றாய்!

நிலாவெளி கைலேஸ்வரா கல்லூரியில் ஓய்வு பெறும்
வரை தன்னலம் மறந்து கல்விச் சிந்தனையில்
மாணவர்களின் நலனே தனதென்று கல்லூரியின்
தரத்தினை உயர்த்தி பெருமை பேற்றினை பெற்ற
மனநிறைவொடு ஓய்வூதியராய் அடக்கமுடன் வாழ்ந்தாரே!

நோயும் வந்தது ஞாபக மறதியென்ற பொல்லாத
பெயரில் காலனும் வந்தானே பெறா மகனும் பாசமாய்
தாய்க்கு மேலாய் சீரோடு சிறப்போடு நொந்து விடாது
துணையிருக்க நேரமும் வந்ததோ உற்றவர் கலங்கிடவே
இறைவன் திருப்பாதமும் ஏற்றாரோ விரும்பி.!

- குடும்பத்தினர் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிபர் எனும்
# நல் ஆசானாய்



கல்வி எனும் மூன்றெழுத்திலே எழுந்து
கற்றுயர்ந்த பயில்வானாய் திகழ்ந்து
வாழ்க்கை எனும் நான்கெழுத்திலே உயர்ந்து
ஆசானாய் எம் முன்னே சென்றாய்
வழிப்போக்கரா இருந்த எமக்கு வழிகாட்டினாய் தாயே!
அதிபர் எனும் உச்ச இடத்தை பெற்ற நீ
இல்லறத்தை இனிதே நடத்தினாய் இன்புற்று வாழ்வில்
எம் நெஞ்சில் என்றும் நீங்கா நினைவுடன்



**பேத்தி**
**தேவகி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலைத் திருப்பதிகம்

திருஞானசம்பந்தர்

பண் – புறநீர்மை



1. நிரைகழல் அரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணி திருமேனி
வரைகெழு மகளோர் பாகமாய்ப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

2. கடிதென வந்த கரிதனை யுரித்து
அவ்வுரி மேனிமேற் போர்ப்பார்
பிடியென நடையாள் பெய்வளை மடந்தை
பிறைநுத லவளொடும் உடனாய்க்
கொடிதெனக் கதறும் குரைகடல் சூழ்ந்து
கொள்ள முன் நித்திலஞ் சுமந்து
குடிதனைப் நெருக்கிப் பெருக்கமாய்த் தோன்றுங்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பனித்திளந் திங்கட் பைந்தலை நாகம்
படர்சடைமுடி யிடைவைத்தார்
கனித்திளந் துவர்வாய்க் காரிகை பாகமாக
முன் கலந்தவர் மதில்மேல்
தனித்தபே ருருவ விழித் தழல்நாகந்
தாங்கிய மேருவெஞ் சிலையாக்
குனித்ததோர் வில்லார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே

4. பழித்திளங் கங்கை சடையிடை வைத்துப்
பாங்குடை மதனனைப் பொடியா
விழித்தவன்தேவி வேண்ட முன்கொடுத்த
விமலனார் கமலமார் பாதர்
தெழித்துமுன் அரற்றுஞ் செழுங்கடல் தரளஞ்
செம்பொனும் இப்பியுஞ் சுமந்து
கொழித்துவன் திரைகள் கடையிடைச் சேர்க்குங்
கோணமா மலையமர்ந் தாரே.

5. தாயினும் நல்ல தலைவரென் றடியார்
தம்மடி போற்றி சைப்பார்கள்
வாயினும் மனத்தும் மருவிநின் றகலா
மாண்பினர் காண்பல வேடர்
நோயிலும் பிணியும் தொழிலர் பால்நீக்கி
நுழைதரு நூலினர் ஞாலம்
கோயிலுஞ் சுனையும் கடலுடன் சூழ்ந்த
கோணமா மலையமர்ந் தாரே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. பரிந்துநன் மனத்தால் வழிபடு மாணி
தன்னுயிர் மேல்வருங் கூற்றைத்
திரிந்திடா வண்ணம் உதைத்த வற்கருளுஞ்
செம்மையார் நம்மையாளுடையார்
விரிந்துயர் மௌவல் மாதவி புன்னை
வேங்கைவண் செருந்தி செண்பகத்தின்
குருந்தொடு முல்லை கொடிவிடும் பொழில்சூழ்
கோணமா மலையமர்ந் தாரே

(7ம் பாடல் கிடைக்கவில்லை)

8. எடுத்தவன் தருக்கை யிழித்தவர் விரலால்
ஏத்திட வாத்தமாம் பேறு
தொடுத்தவர் செல்வந் தோன்றிய பிறப்பும்
இறப்பறி யாதவர் வேள்வி
தடுத்தவர் வனப்பால் வைத்ததோர் கருணை
தன்னருட் பெருமையும் வாழ்வும்
கொடுத்தவர் விரும்பும் பெரும்புக ழாளர்
கோணமா மலையமர்ந் தாரே.

9. அருவரா தொருகை வெண்டலை யேந்தி
யகந்தொறும் பலியுடன் புக்க
பெருவரா யுறையும் நீர்மையர் சீர்மைப்
பெருங்கடல் வண்ணனும் பிரமன்
இருவரும் அறியா வண்ணம் ஒள் எரியாய்
உயர்ந்தவர் பெயர்ந்தநன் மாற்கும்
குருவராய் நின்றார் குரைகழல் வணங்கக்
கோணமா மலையமர்ந் தாரே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. நின்றுணுஞ் சமணும் இருந்துணுந் தேரும்
நெறிய லாதன புறங்கூற
வென்றுநஞ் சுண்ணும் பரிசினர் ஒரு பால்
மெல்லிய ளொடும் உடனாகித்
துன்றுமொண் பௌவ மவ்வலுஞ் சூழ்ந்து
தாழ்ந்துறு திரைபலமோதிக்
குன்று மொன்கானல் வாசம்வந் துலவுங்
கோணமா மலையமர்ந் தாரே

11. குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த
கோணமா மலை யமர்ந்தாரைக்
கற்றுணர் கேள்விக் காழியர் பெருமான்
கருத்துடை ஞானசம்பந்தன்
உற்றசெந் தமிழார் மாலை யீரைந்தும்
உரைப்பவர் கேட்பவர் உயர்ந்தோர்
சுற்ற முமாகித் தொல்வினை யடையார்
தோன்றுவர் வானி டைப்பொலிந்தே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய



# திருவாசகம்

### திருவாசகச் சிறப்பு

தொல்லை யிரும்பிறவிச் சூழுந் தளைநீக்கி
அல்லலறுத் தானந்த மாக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவா சகம் என்னுந் தேன்.

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க!
கோகழியாண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க!
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க!
வேகங் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவா ருண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவா ரோங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க!
ஈசனடி போற்றி எந்தையடி போற்றி
தேசனடி போற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலனடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பறுக்கும் மன்ன னடி போற்றி
சீரார் பெருந்துறை நந் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய வுரைப்பன் யான்
கண்ணுதலான் தன் கருணை கண் காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங் கொளியாய்
எண்ணிறந் தெல்லையிலாதானே நின்பெருஞ் சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யே யுன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்து ஓங்கார மாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வென ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமானனாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞானமாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின்றொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றம் மனங்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோ ரைந்துடையாய் விண்ணோர்களேத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம் பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டி
புறந்தோல் போர்த் தெங்கும் புழுவழுக்கு மூடி
மலஞ் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலந்தா னிலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனா ரமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதா ருள்ளத் தொளிக்கும் ஒளியானே
நீரா யுருக்கி யென் ஆருயிராய் நின்றானே
இன்பமுந் துன்பமு மில்லானே யுள்ளானே
அன்பருக்குக் கன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ் ஞானத்தாற் கொண்டுணர்வார் தங்கருத்தின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே யென் சிந்தனையுள்
ஊற்றான உண்ணாரமுதே உடையானே
வேற்றுவிகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம்ஐயா அரனேஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய் கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவிஅறுப்பானே யோவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தி னுள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்

(சிவபுராணம் முற்றிற்று)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடற்கூற்று வண்ணம்

தனதனதான தனதனதான
தந்ததனந்தன தந்ததனந்தன
தனனதனந்த தனனதனந்த
தானனதானன தானனதானன
தந்ததனந்தன தந்ததனந்தன

ஒரு மடமாது ஒருவனுமாகி
இன்ப சுகந்தரும் அன்பு பொருந்தி
உணர்வு கலங்கி யொழுகிய விந்து
ஊறு சுரோணித மீது கலந்து
பனியிலோர் பாதி சிறு துளி மாது
பண்டியில் வந்து புகுந்து திரண்டு
பதும வரும்பு கபடமி தென்று
பார்வைமெய் வாய்செவி கால்கைகளென்று
உருவமு மாகி உயிர்வளர் மாதம்
ஒன்பது மொன்றுநி றைந்து மடந்தை
உதர மகன்று புவயில் விழுந்து
யோகமும் வாரமும் நாளுமறிந்து
மகளிர்கள் சேனை தாவணை யாடை
மண்பட வுந்தியு தைந்து கவிழ்ந்து
மடமயில் கொங்கை யமுத மருந்தி
யோரறி வீரறி வாகி வளர்ந்து
ஒளிநகை யூறல் இதழ்மட வாரும்
உவந்துமு கந்திட வந்து தவழ்ந்து
மடியி லிருந்து மழலை மொழிந்து
வாவிரு போவென நாமம் விளம்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடைமணி யாடை யரைவட மாட
வுண்பவர் தின்பவர் தங்களொ டுண்டு
தெருவி லிருந்து புழுதி யளைந்து
தேடிய பாலரோ டோடி நடந்து
அஞ்சு வயதாகி விளையாடியே
உயர்தரு ஞான குருவுப தேச
முத்தமி ழின்கலை யுங்கரை கண்டு
வளர்பிறை யென்று பலரும் விளம்ப
வாழ்பதினாறுபி ராயமும் வந்து
மயிர்முடி கோதி யறுபகநீல
வண்டிமிர் தண்டொடை கொண்டை புனைந்து
மணிபொ னிலங்கு பணிகளணிந்து
மகாதர் போகதர் கூடி வணங்க
மதன சொரூப னிவனென மோக
மங்கையர் கண்டும ருண்டுமி திரண்டு
வரிவிழி கொண்டு சுழிய வெறிந்து
மாமயில் போலவர் போவது கண்டு
மனது பொறாமல் அவர்பிற கோடி
மங்கல செங்கல சந்திகழ் கொங்கை
மருவ மயங்கி யிதழமு துண்டு
தேடிய மா முதல் சேர வழங்கி
ஒருமுத லாகு முதுபொரு ளாயி
ருந்த தனங்களும் வம்பி லழந்து
மதன சுகந்த விதனமி தென்று
வாலிப கோலமும் வேறு பிரிந்து
வண்மையு மாறி யிளமையு மாறி
வன்பல் விழுந்திரு கண்க ளிருண்டு
வயது முதிர்ந்து நரைதிரை வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாதவி ரோதகு ரோதமடைந்து
செங்கை யினிலோர் தடியு மாகியே
வருவது போவு தொருமுது கூனு
மந்தி யெனும்படி குந்தி நடந்து
மதியு மிழந்து செவிதிமிர் வந்து
வாயறி யாமல்வி டாமல் மொழிந்து
துயில்வரு நேர மிருமல் பொறாது
தொண்டையு நெஞ்சமு லர்ந்து வறண்டு
துகிலு மிழந்து சுணையு மழிந்து
தோகையர் பாலர்கள் கோரணி கொண்டு
கலியுக மீதில் இவர்மரி யாதை
கண்டிடு மென்பவர் சஞ்சல மிஞ்ச
கலகலவென்று மலசலம் வந்து
கால்வழி மேல்வழி சார நடந்து
தெளிவும் இராமல் உரைதடு மாறி
சிந்தையும் நெஞ்சமும் அலைந்து மருண்டு
திடமு முலைந்து மிகவு மலைந்து
தேறிந லாதர வேதென நொந்து
மறையவன் வேதன் எழுதிய வாறு
வந்தது கண்டமும் என்று தெளிந்து
இனியென கண்டம் இனியென தொந்தம்
மேதினி வாழ்வு நிலாதினி நின்ற
கடன்முறை பேசும் எனவுரை நாவு
றங்கி விழுந்துகை கொண்டு பொழிந்து
கடைவழி கஞ்சி யொழுகிட வந்து
பூதமும் நாலுசு வாசமும் நின்று
நெஞ்சு தடுமாறி வரும் நேரமே
வளர்பிறை போல வெயிறு முரோம



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஞ்சடை யுஞ்சி குஞ் சியும் விஞ்ச
மனது மிருண்ட் வடிவு மிலங்க
மாமலை போல்யம தூதர்கள் வந்து
வலைகொடு வீசியுயிர்கொடு போக
மைந்தரும் வந்துகு னிந்தழ நொந்து
மடியில் விழுந்து மனைவி புலம்ப
மாழ்கின ரேயிவர் காலம றிந்து
பழையவர் காணும் எனுமய லார்கள்
பஞ்சு பறந்திட நின்றவர் பந்தர்
இடுமென வந்து பறையிட முந்த
வேபிணம் வேகவி சாரியு மென்று
பலரையு மேவி முதியவர் தாமி
ருந்த சவங்கழு வுஞ்சில ரென்று
பணிதுகில் தொங்கல் களப மணிந்து
பாவக மேசெய்து நாறுமுடம்பை
வரிசை கெடாமல் எடுமென வோடி
வந்தி மைந்தர் குனிந்து சுமந்து
கடுகி நடந்து சுடலை யடைந்து
மானிட வாழ்வென வாழ்வென நொந்து
விறகிடை மூடி யழல்கொடு போட
வெந்துவி ழுந்து முறிந்து நிணங்கள்
உருகி யெலும்பு கருகி யடங்கி
யோர்பிடி நீறுமி லாத வுடம்பை
நம்புமடி யேனை யாளுமே.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணத்திற்குப் பின்

வாழ்க்கையின் முடிவு மரணம் என்பது அனைவரும் அறிந்த விடயம் மரணத்திற்குப் பின் என்ன? என்பதை யாரும் அறிவதில்லை.

விஷய ஞானம் இல்லாத இடத்தில் பயம். பீதி முதலிய மனக் கஷ்டங்கள் தோன்றுவது சகஜம்.

மரணம் என்று நினைக்கும் பொழுது மரணத்திற்குப் பின் என்ன நிகழ்கின்றதென்ற சரியான அறிவில்லாததால் மரணம் பயம் உண்டாகின்றது.

மரணம் என்பது ஜீவனைப் பொறுத்தவரையில் புதிய சக்தியும் உற்சாகமும் புது ஆற்றல் திறமையும் உயிரில் உருவாகும் ஒரு புனிதமான நிகழ்ச்சி

பகல் முழுவதும் உழைத்துக் களைப்படைந்தவர்களுக்கு இரவு உறக்கம் களை தீர்த்துப் புத்துணர்வும் தென்பும் அளிப்பது போன்று வாழ்நாள் முழுவதும் பல துறைகளிலும் செயலாற்றி வாழ்வில் களைப்படைந்த மனிதர்களுடைய ஜீவன் சுயமாகவே ஏற்றெடுத்த ஒரு தீர்க்க கால உறக்கம் அல்லது ஓய்வுதான் மரணம்.

பழுதடைந்த உடையை மாற்றிப் புது உடை அணிவது போன்று ஜீவன் தனது இலட்சியத்தை அடையும் வரையும் பழுதடைந்த சரீரத்தை மாற்றிப் புது சரீரத்தில் நுழைய வேண்டியிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மரணத்திற்குப் பின் உயிர் என்ன நிலையடைகின்ற தென்பதைப் பற்றி இந்து சமய சாஸ்திரங்கள் விளக்கம் தருகின்றன.

கண்ணுவன்,கபிலன் போன்ற மகா ரிஷிகளின் பரிணாம சித்தாந்த சாஸ்திரங்களில் இது விஞ்ஞான பூர்வ மாகத் தெளிவு படுத்தப்பட்டிருக்கின்றது.

நசிகேதன் நமனைக் குருவாக ஏற்பதற்குரிய காரணம், மரணத்திற்குப் பின் ஜீவனுடைய நிலையை அறிவதற்குரிய பெரும் அவாதான் என்பதை கடோப நிடதம் கூறுகின்றது.

ஒரு நோயாளி நோயைக் குணப்படுத்துவதற்காக ஒரு வைத்தியரைச் சந்திக்கச் செல்கின்றான் பின்னர் சந்திக்க முடியாமல் திரும்பி வருகின்றான். மீண்டும். மீண்டும் செல்லும் பொழுதும் அதே நிலைதான்

மருத்துவரைச் சந்திக்கும் வரையும் வருத்தமுடையவர் நோக்கமாகையால் அது கைகூடும் வரையும் இவ்வாறு நிகழ்ந்து கொண்டிருக்கின்றது.

ஜீவன் சிவத்துடன் ஐக்கியப் படுவதுதான் பிறவியின் நோக்கம் என்ற காரணத்தினால் ஜீவன் சுத்த சிவநிலை அடையும் வரையும் பிறப்பு, இறப்பு என்பன நிகழ்ந்து கொண்டிருக்கும்.

உயிரைப் பற்றி சில அடிப்படைத் தத்துவங்களைத் தெரிந்து கொள்ளுப்பட்சத்தில் இவ்விஷயத்திலிருக்கும் பல சந்தேகங்கள் தீர்க்கப்பட்டு விடுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்து மத உயிரியல் சாஸ்திரப்படி சகல சராசரங்களும் உயிருடையன தூணிலும், துரும்பிலும் உயிர் ஊடுருவி நிற்கின்றது. மனிதனும் மனிதனுடைய நிழலும் போன்று உயிர் பரமாத்மாவின் பிரதி பாசம்

ஆகையால் உயிரை ஆக்கவும் அழிக்கவும் முடியாது உயிரை உண்டாக்க முடியாத காரணத்தால் ஒரு புதுச் சரீரம் உருவாகும் பொழுது நிலையான பழைய உயிரைத் திரும்பவும் சுவீகரிக்க வேண்டியிருக்கிறது.

பழைய உடல் அழிந்து புதுப் புது உடல் உருவாகிக் கொண்டிருப்பதாலும் என்றும் இருக்கின்ற உயிரை அழிக்கவும் ஆக்கவும் முடியாதிருப்பதாலும் மறு பிறப்பென்பது நிகழ்ந்து கொண்டேயிருக்கும்.

## மரணம்

ஒரு திரவத்தின் அடிப்படையான இறுதி அணுக்களிலிருந்து விசேஷ ரீதியில் உருவாகும் அலை நீளச் சபகை சக்தியே உயிரென்று நவீன அலைச் சித்தாந்த சாஸ்திரங்கள் கூறுகின்றன.

ஜீவன் தேகத்திலிருந்து பிரிவது (மரணம்) ஒரே நேரத்தில் ஒரே முறையில் நிகழ்வதில்லை. ஒரு குறிக்கப் பட்ட நேரத்திற்குள் இரண்டு தரமாக ஜீவன் பிரிந்து செல்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதல் தாம் நிகழ்கின்ற மரணம் தைதீக மரணம் என்றும் இரண்டாம் முறை நிகழ்வது கோசீக மரணம் என்று சொல்லப்படும்

வெறும் சரீரத்திலிருந்துது மாத்திரம் உயிர் பிரிந்து சரீரம் செயலற்றுப் போகும் நிலைக்கு தைதீக மரணம் என்றும் இறுதியில் பஞ்ச கோசத்திலிருந்து உயிர் பிரிவதை கோசீக மரணம் என்றும் பஞ்ச கோசத்திலிருந்து முற்றாக ஜீவன் பிரிந்தாற்றான் உண்மையான மரணம் சம்பவிக்கின்றது என்றும் கூறப்படுகிறது.

தைதீக மரணத்திற்குப் பின் இரண்டு அல்லது மூன்று மணித்தியாலத்திற்குள் கோசீக மரணம் நிகழ்கிறது.

அபூர்வமாக சில சந்தர்ப்பங்களில் கோசீக மரணம் நிகழ்வதற்கு முன், சரீரத்திலிருந்து பிரிந்து நின்ற ஜீவன் திரும்பவும் சரீரத்தில் நுழைவதுண்டு.

இதைத்தான் இறந்தவர் திரும்பவும் உயிர் பெற்ற சம்பவமாகக் கேள்விப்படுகிறோம்.

எனவே சில சந்தர்ப்பங்களில் இவ்விதம் நிகழ்வதால்
சரீரம் அதிகம் பழுதடையாத நிலையில் மரணம் சம்பவிக்கும்போது, குறைந்தது ஆறு அல்லது எட்டு மணித்தியாலங்களின் பின்னர் தகனம் செய்வதுதான் உசிதமான தாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானம்

முன் ஜென்மங்களைப் பற்றி அறிவதற்கு பரித்து வாஜ தர்சனம் என்ற ஒரு சாஸ்திரம் கிரந்தம் இன்றும் நடைமுறையில் இருக்கின்றது, இதை இதய சுத்தமுடைய வர்கள், நாலு ஆண்டுகள் அப்பியாசித்தால் தமது சொந்தப் பூர்வ ஜென்மங்களைப் பற்றியம், எட்டாண்டு பயின்றால் மற்றவர்களுடைய பூர்வ ஜென்ம விருத்தாந்தங்களைப் பற்றியும் அறியத்தக்க ஞானம் சித்திக்கும் .

அல்லது மூலாதார சக்தியை ஆதார சக்கரங்கள் வழியே சகஸ்ராரத்தில் ஏற்றி சிறுத்திப் பழகிய மகா யோகிகள், சித்தத்தில் அடங்கிக் கிடக்கும். பூர்வ ஜென்ம வாசனைகளில் சம்யமனம் செய்து பார்க்கும் பொழுது முன ஜென்மங்களைப் பற்றிய அறிவு கிடைக்கின்றது.

ஜீவன் பிறவி தோறும் செய்த தர்ம பலாலன் களுக்குத் தக்கபடி அடுத்தடுத்துப் பிறவிகளெடுத்துச் சுக துக்கங்களை அனுபவிக்கின்றது

முற்சென்மங்களிற் செய்த கர்ம பலன்களைப் பற்றி மனிதன் அறிவானாகில் பாப கர்மங்களைப் புரிவதற்கு அஞ்சி வாழ்வான்.

ஆகையால் பிறவி தோறும் வினையாற்றிக் களைப்படைந்த ஜீவன களையைத் தீர்த்துப் புத்துணர்வு பெறுவதற்காக மரணம் என்ற ஒரு இடைக்கால ஓய்வெடுப்பதைப் பற்றிச் சந்தோஷம் அடையாமல் பயப்படுவதேன்.?

**சுவாமி**

**- கெங்காதரனாந்தா -**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**அமரர்**

**திருமதி. வள்ளிநாயகி பூபாலசிங்கம்**

அவர்களின் மறைவைக் கேட்டவுடன் ஓடோடி
வந்து ஆறுதல், கூறியதுடன் அஞ்சலி செலுத்திய
நல் நெஞ்சங்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த
நன்றிகள். அன்னாரின் இறுதி சடங்குகளில் கலந்து
கொண்டு ஆறுதல் கூறியவருக்கும் மலர் வலயங்கள்
வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும் பதாதை
காட்சி படுத்திய நிறுவனத்திற்கும் தொலைபேசி மூலம்
அனுதாபம் தெரிவித்த நல் உள்ளங்களுக்கும்
பல வகையிலும் உதவிய உற்றார் உறவினர்
அயலவர் நண்பர்களுக்கும் எங்கள் நன்றியை

தெரிவித்துக்கொள்கின்றோம்

**- குடும்பத்தினர் -**



**2ம் வட்டாரம்**
**நிலாவெளி**

- தொகுப்பாசிரியர் : சுந்தா (0756901316)
- அச்சு : ஏ.ஆர்.டிரேடர்ஸ் 0777695656

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ndation.
.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org